வாட்ஸ்ஆப் மூலம் மூத்தோர்கள் இணைப்பு

இன்றைய தொடர்பு முறைகளில் மிகவும் பரவலான ஒன்றாக இருப்பது தகவல் அனுப்பும் (text messaging) சேவை. ஆனால் பெரும்பாலான தொலைத்தொடர்பு நிறுவனங்கள் குறுந்தகவல்களுக்கு (SMS) வரம்புகள் விதிக்கின்றன.

வாட்ஸ்ஆப் செயலி என்பது SMS-க்கு ஒரு மாற்றாகும். மொபைல் தரவு மற்றும் வை-ஃபை இணைப்பு மூலமாக இந்தச் செயலியைப் பயன்படுத்தி நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

வாட்ஸ்ஆப் என்பது தகவல் மட்டும் அனுப்பும் செயலி அல்ல. புகைப்படம் மற்றும் காணொளி பகிர்வு, தொலைபேசி மற்றும் காணொளி அழைப்புகள், அமைவிடப் பகிர்வு மற்றும் பலவும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு தொடர்புக் கருவி இது.

குழு அரட்டையை அமைத்தல்



வாட்ஸ்ஆப் செயலியைத் திறந்து திரையில் வலதுபுறம் அடியில் உள்ள **பச்சை ஸ்பீச் பபல் சின்னத்தைத்** தட்டவும். பிறகு, **"நியூ குரூப்"** தேர்ந்தெடுத்து, அரட்டையில் நீங்கள் சேர்க்க விரும்பும் உங்கள் தொடர்புகளைத் தேர்ந்தெடுக்கவும். தொடர்வதற்கு **பச்சை அம்புக்குறியின்** மீது தட்டவும்.

உங்கள் குழுப்பெயரை உள்ளிட்டு, குழு அரட்டைக்கான **ஒரு புகைப்படத்தைச் சேர்க்கவும்**. பிறகு **பச்சை டிக் குறியீட்டினைத் தட்டி** நிறைவு செய்யவும். ஒரே அரட்டையில் உங்கள் நண்பர்கள் குழுவுக்கு ஒரு தகவலை உங்களால் இப்போது அனுப்ப முடியும்!



குரல் தகவல் அனுப்புதல்

உங்கள் அன்புக்குரியவருக்கு ஒரு பிறந்தநாள் வாழ்த்தைப் பாட விரும்புகிறீர்களா?
நீங்கள் குரல் தகவல்களை அனுப்பி உங்கள் அரட்டை அனுபவத்தை செறிவூட்டுவதற்கும் வாட்ஸ்ஆப் அனுமதிக்கிறது. ஒரு தொடர்புடனான அரட்டையைத் தேர்ந்தெடுத்து, நீங்கள் வழக்கமாக உங்கள் தகவலை உள்ளிடும் பெட்டிக்கு அருகில் உள்ள மைக்ரோபோன் சின்னத்தைத் தேர்ந்தெடுங்கள்.

தொலைபேசி அல்லது காணொளி அழைப்பினைச்

உங்கள் அன்புக்குரியவருக்கும் உங்களுக்கும் இடையிலான தூரத்தைக் களைவதற்கு வாட்ஸ்ஆப் உதவுகிறது, குறிப்பாக அவர்கள் மற்றொரு நாட்டில் இருக்கும் நிலையில். ஓர் அரட்டையைத் திறந்து, காணொளி அல்லது தொலைபேசி அழைப்பினை இலவசமாகச் செய்ய, திரையின் வலதுபுறம் மேலே உள்ள கேமரா அல்லது தொலைபேசி சின்னத்தைத் தேர்ந்தெடுக்கவும்.
தரவு கட்டணங்கள் விதிக்கப்படலாம்.



உங்கள் அமைவிடத்தைப் பகிர்தல்



நீங்கள் இருக்குமிடம் உட்பட, எந்தவோர் அமைவிடத்தையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும் செயலி அனுமதிக்கிறது.

தகவல் பெட்டியில் உள்ளே பேப்பர்கிளிப் சின்னத்தைத் தட்டி "அமைவிடத்தை" தேர்ந்தெடுக்கவும்.

அதன்பிறகு உங்கள் சொந்த அமைவிடத்தை நீங்கள் அனுப்பலாம் அல்லது வலதுபுறம் மேலே உள்ள பூதக்கண்ணாடி சின்னத்தைப் பயன்படுத்தி வேறோர் அமைவிடத்தைத் தேடலாம்.

தாங்கள் இருக்கும் இடத்தைப் பற்றி நன்கு தெரியாத மூத்தோர்கள், சந்திப்பு இடத்தை அமைக்கும்போது தங்களின் தொடர்பிடம் தெரியப்படுத்துவதற்கு அல்லது நீங்கள் இருக்கும் இடத்தைக் காண்பிக்க உங்கள் அமைவிடத்தை ஒருவருக்கு அனுப்புவதற்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

ஒரு படத்தை அல்லது காணொளியை அனுப்புதல்

புகைப்படங்கள் அல்லது காணொளிகள் மூலம் உங்கள் நினைவுகளை நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ள வாட்ஸ்ஆப் உதவுகிறது. மீண்டும் பேப்பர்கிளிப் சின்னத்தைத் தட்டி, உங்கள் கைப்பேசியின் லைப்ரரியிலிருந்து தேர்ந்தெடுப்பதற்கு "கேலரியை" தேர்ந்தெடுக்கவும் அல்லது அந்த இடத்தில் ஒரு புகைப்படத்தை எடுப்பதற்கு "கேமராவை" தட்டவும்.

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

SG:D | GET READY!
SILVER INFOCOMM